ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1936/33 - 2015 ඔක්තෝබර් මස 14 වැනි බදාදා - 2015.10.14
*1936/33 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மத்திய மாகாண மாகாண சபை**

*2015 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, மத்திய மாகாண மாகாண சபையின் பொருட்கள் அடகுபிடிப்பவர்களின் (திருத்திய) நியதிச்சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாண மாகாண சபையால் 2015, ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதியன்று உறுதி செய்யப்பட்ட 2015, ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதியன்று மாண்புமிகு ஆளுநர் அவர்களால் அங்கீகாரம் செய்யப்பட்ட மேலே குறிப்பிடப்பட்ட நியதிச்சட்டத்தை எல்லோரும் அறிந்துகொள்வதற்கு இத்தால் பிரசுரிக்கின்றேன்.

சரத் ஏக்கநாயக்க,
முதலமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல், நீதியும் சமாதானமும்,
உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாண நிர்வாகம், மனிதவலு,
கல்வி, கலாசார நடவடிக்கைகள், சுற்றுலாத்துறை, காணி, கூட்டுறவு
அபிவிருத்தி, வர்த்தகமும் வாணிபமும், உணவு வழங்கல் மற்றும் விநியோகம்,
முதலீட்டு ஒருங்கமைப்பு அமைச்சரும்
மத்திய மாகாண மாகாண சபை.

முதலமைச்சர் அலுவலகம்,
மத்திய மாகாண மாகாண சபை,
கண்டி,
2015, ஒற்றோபர் 09.

**மத்திய மாகாண மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பொருள் அடகுபிடிப்போரது (திருத்திய) வரைவு மசோதா**

*மத்திய மாகாண மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, பொருள் அடகு பிடிப்போரது நியதிச் சட்டத்தின் திருத்தம் செய்யும் வரைவு நியதி.*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாணத்தின் மாகாண சபையினால் இவ்வாறு விதிக்கப்படுகின்றது.

*சுருக்கப் பெயரும் நடைமுறைத் திகதியும்.*

1. இந்த நியதிச் சட்டம் மத்திய மாகாண 2015 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, பொருள் அடகுபிடிப்போரது (திருத்திய) நியதிச்சட்டம் என அழைக்கப்படுவதுடன் மத்திய மாகாணத்தின் ஆளுநர் அவர்களது அதிகாரம் பெறப்பட்ட தினத்திலிருந்து செயலுக்கு வரும்.

2. இங்கு இதன் பின்னர் பிரதம நியதிச் சட்டம் என அழைக்கப்படும் மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, அடகுபிடிப்போரது நியதிச்சட்டத்தின் 8 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் (ஆ) வாக்கிய தொடருக்குப் பதிலீடாகப் பின்வரும் புதிய வாக்கியத் தொடர் வரும் வகையில் திருத்தம் செய்யப்படுகின்றது.

(ஆ) இந்த நியதிச்சட்டத்தின் 46 (1) ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கமையத் தயாரிக்கப்பட்ட அடைவுப்படிவம்.

3. பிரதம நியதிச் சட்டத்தின் 10 ஆவது பிரிவின் 3 ஆவது உப பிரிவு பின்வரும் வகையில் திருத்தம் செய்யப்படுகின்றது:-

(3) இறைவரி ஆணையாளரால் வைப்புச் செய்யும்படி அனுமதிப்பத்திரதாரிக்கு அறிவிக்கப்படும் வைப்புத் தொகையை இறைவரி ஆணையாளர் பெயரில் வைப்புச் செய்யப்படுவதுடன், வர்த்தகத்தை மூடும் அல்லது கைமாற்றும் சந்தர்ப்பம் தவிர்ந்த நிலைமைகளில் வைப்புத் தொகை வைப்புச் செய்தவருக்கு மீளளிக்கப்படலாகாது. எனினும், அனுமதிப் பத்திரதாரியினால் பொருள் அடகு வைத்தவருக்கு அல்லது அடகு வைத்தவர்களுக்கு ஏதாவது பணத்தொகை, தொகையிலிருந்து குறைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

4. பிரதம நியதிச் சட்டத்தின் 13 ஆவது பிரிவு பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது:-

*அனுமதிப்பத்திர தாரியுடைய பெயர், முகவரி வர்த்த மானியில் பிரசித் தப்படுத்தல்.*

13. (1) ஆண்டுதோறும் அனுமதிப்பத்திரமுடைய அடகுபிடிப்பவருடைய பெயர், வர்த்தகப் பெயர், அவ்வர்த்தகம் நடாத்திச் செல்லப்படும் இடத்தின் முகவரி ;

(2) மேலே 39 ஆம் வாசகத்தின் கீழ் குற்றவாளியாக்கப்படும் சகல சந்தர்ப்பங்களிலும் அந்நபரின் பெயர், தனிப்பட்ட முகவரி, வர்த்தகத்தின் பெயர், வர்த்தகம் செய்யப்படும் இடத்தின் முகவரி, யாராவது ஒரு அனுமதிப்பத்திரதாரியுடைய அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் காலம் கடந்திருப்பின், தொடர் ஆண்டுக்குரிய அனுமதிப்பத்திரம் வழங்கப்படாமல் இருந்தாலும் அல்லது இறைவரி ஆணையாளர் அது பற்றி அரச வர்த்தமானியில் அறிவித்தலொன்று வெளியிடுதல் வேண்டும்.

*வர்த்தகத்தை முடித்து கணக்கு களை மூடிவிடும் போது அதன் பொறுப்புகளில் இருந்து விடுபடல்.*

5. பிரதம நியதிச்சட்டத்தின் 28 ஆவது பிரிவின் (3) ஆவது உப பிரிவு பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது:-

எவரேனும் ஒரு நபரால் பொருள் அடகுபிடிக்கும் வர்த்தகத்தை தொடர்ந்து செய்வதைக் கைவிடும் சந்தர்ப்பத்தில் அவரால் வைக்கப்பட்ட (1) ஆம் உப பிரிவில் வைப்புத் தொகையை வழங்க வேண்டியேற்பட்டால் அத்தொகையைக் கழித்துக்கொண்டு மீதித் தொகையை அடகுபிடிப்பவருக்குச் செலுத்துதல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்கும்.*

6. இந்த மசோதாவின் சிங்கள, தமிழ், ஆங்கில வாசகங்களிடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

*10- 1090*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.